**UG–CN–1021** **BLTN–21**

# U.G. DEGREE EXAMINATION — DECEMBER, 2023.

தமிழ்

Second Year

இடைக்கால இலக்கியம்

Time : 3 hours Maximum marks : 70

பகுதி அ — (3 × 3 = 9 மதிப்பெண்கள்)

கீழே கொடுக்கப்பட்டுள்ள **ஐந்து** வினாக்களுள் ஏதேனும் **மூன்று** வினாக்களுக்கு மட்டும் 100 சொற்களில் விடையளிக்கவும்.

1. நாவுக்கரசர் மண்ணுயிர்களுக்குக் கூறும் அறிவுரைகள் யாவை?

2. மாணிக்கவாசகர்க்காக இறைவன் நிகழ்த்திய அற்புதங்களில் ஒன்றினை எழுதுக.

3. சிலப்பதிகாரம் குறிப்பு எழுதுக.

4. குணங்குடியாரின் – வாழ்க்கைக் குறிப்பினை எழுதுக.

5. தாவீத்தின் பக்தித் திறனைப் புலப்படுத்துக.

பகுதி ஆ — (3 × 7 = 21 மதிப்பெண்கள்)

கீழே கொடுக்கப்பட்டுள்ள **மூன்று** வினாக்களுள் ஏதேனும் **ஐந்து** வினாக்களுக்கு மட்டும் 200 சொற்களில் விடையளிக்கவும்.

6. தேவாரப் பதிகங்கள் வெளிப்படுத்தும் சிவபெருமானின் சிறப்புகள் குறித்து எழுதுக.

7. பெரியாழ்வார் திருமொழியில் தாலாட்டுப் பாடல் அமைப்பு குறித்து எழுதுக.

8. குணங்குடியாரின் இறைக்கொள்கையினை விளக்குக.

9. வாலி இராமனை எவ்வாறு போற்றியுரைத்தான்? விளக்குக.

10. தாவீது மன்னனின் சிறப்புகளை எழுதுக.

பகுதி இ — (4 × 10 = 40 மதிப்பெண்கள்)

கீழே கொடுக்கப்பட்டுள்ள **ஏழு** வினாக்களுள் ஏதேனும் **நான்கு** வினாக்களுக்கு மட்டும் 500 சொற்களில் விடையளிக்கவும்.

11. சைவ, வைணவ சமய நெறிகளின் சிறப்புகளை நும்பாடப் பகுதி கொண்டு விவரி.

12. குணங்குடி மஸ்தான் சாகிபின் இறைக்கொள்கையை விளக்கியெழுதுக.

13. கானல்வரிப் பாடல்கள் வெளிப்படுத்தும் அகத்துறைச் செய்திகள் குறித்து விளக்கியெழுதுக.

14. வாலி-சுக்கிரீவன் போர் குறித்துக் கட்டுரை ஒன்றினை எழுதுக.

15. சூசை பிறந்த வரலாற்றினை வளம் சனித்த படலம் வழி விவரித்தெழுதுக.

16. தேம்பாவணியின் மொழிநடையை நும்பாடப்பகுதி கொண்டு ஆய்ந்தெழுதுக.

17. தமிழ் இலக்கிய வகைமைகளில் பக்தி இலக்கியங்கள் பெறும் இடத்தினை விவரி.

| **UG-CN-1022** | **BLTN-22** |
|---|---|

U.G. DEGREE EXAMINATION –
DECEMBER, 2023.

Second Year

இலக்கணம் –2 : நம்பியகப் பொருள்,
புறப்பொருள் வெண்பாமாலை

நம்பியகப் பொருள், புறப்பொருள் வெண்பாமாலை

Time : 3 hours Maximum marks : 70

பகுதி அ — ($3 \times 3 = 9$ மதிப்பெண்கள்)

கீழ்க்காணும் ஐந்து வினாக்களுள் ஏதேனும் மூன்று வினாக்களுக்கு மட்டும் 100 சொற்களில் விடை தருக.

1. உரிப்பொருள் என்றால் என்ன? அவை யாவை?

2. மடல் ஏறுதல் என்றால் என்ன?

3. ஊடல் தணிக்கும் வாயில்கள் யாவர்?

4. பாடாண் திணையின் இலக்கணம் யாது?

5. தொடாக் காஞ்சி என்றால் என்ன?

பகுதி ஆ — ($3 \times 7 = 21$ மதிப்பெண்கள்)

கீழ்க்காணும் ஐந்து வினாக்களுள் ஏதேனும் மூன்று வினாக்களுக்கு மட்டும் 200 சொற்களில் விடை தருக.

6. கைக்கிளையின் பாகுபாடு குறித்து எழுதுக.

7. ஒருவழித் தணத்தலின் விரிகள் பற்றி விளக்குக.

8. அகப்பாட்டு உறுப்புகள் பற்றி எழுதுக.

9. கரந்தைத் திணையின் இலக்கணம் யாது? அதன் துறைகள் குறித்து எழுதுக.

10. காஞ்சிப் போரில் பேய்களின் செயல் குறித்து விளக்குக.

பகுதி இ — ($4 \times 10 = 40$ மதிப்பெண்கள்)

கீழ்க்காணும் ஏழு வினாக்களுள் ஏதேனும் நான்கு வினாக்களுக்கு மட்டும் 500 சொற்களில் விடை தருக.

11. அகத்திணைப் பாகுபாடு குறித்துக் கட்டுரை ஒன்றினை எழுதுக.

12. களவுக்காலத்தில் தோழியின் பங்கினை விளக்கியெழுதுக.

13. அறத்தொடு நிற்றல் குறித்து விவரிக்க.

14. கற்புக் காலப் பிரிவுகள் குறித்துக் கட்டுரை ஒன்றினை எழுதுக.

15. வஞ்சித் திணையின் துறைகள் குறித்து விவரித்தெழுதுக.

16. வாகைத் திணையும் அதன் துறைகளும் குறித்துக் கட்டுரை வரைக.

17. புறப்பொருள் வெண்பாமாலை உணர்த்தும் போரியல் நெறிகளை விளக்கியெழுதுக.

———————

| UG–CN–1023 | BLTN–23 |
|---|---|

# U.G. DEGREE EXAMINATION — DECEMBER 2023.

தமிழ்

Second Year

அற இலக்கியம்

Time : 3 hours Maximum marks : 70

பகுதி அ — (3 × 3 = 9 மதிப்பெண்கள்)

பின்வரும் வினாக்களில் எவையேனும் மூன்றனுக்கு மட்டும் விடையளிக்க.

1. அன்பின் வழியது உயிர்நிலை - விளக்குக.

2. திரிகடுகம் - சிறு குறிப்பு வரைக.

3. சிறுபஞ்சமூலம் நூலின் அமைப்பு, உள்ளடக்கம் குறித்து எழுதுக.

4. ‘எங்கே பிறந்தாலும் என்’ - என முடியும் நீதிவெண்பாப் பாடல் வெளிப்படுத்தும் கருத்தினை எழுதுக.

5. ‘நறுந்தொகை’ நூல் குறித்து குறிப்பு வரைக.

பகுதி ஆ — (3 × 7 = 21 மதிப்பெண்கள்)

பின்வரும் வினாக்களில் எவையேனும் மூன்றனுக்கு மட்டும் விரிவான விடையளிக்க.

6. விருந்தோம்புதலின் சிறப்புகளை விளக்கி எழுதுக.

7. நான்மணிக்கடிகை வலியுறுத்தும் அறக்கருத்துகளைத் தொகுத்து எழுதுக.

8. மதுரைக்கூடலூரார் கிழார் கூறும் 'சிறந்த பத்துகளைத்' தொகுத்துரைக்க.

9. கல்வியின் சிறப்புகளாகக் குமரகுருபரர் கூறுவனவற்றைத் தொகுத்துரைக்க.

10. 'நறுந்தொகை' கூறும் 'அழகுகள்' பற்றிய செய்திகளை விளக்கி வரைக.

பகுதி இ — (4 × 10 = 40 மதிப்பெண்கள்)

பின்வரும் வினாக்களில் எவையேனும் நான்கனுக்கு மட்டும் விரிவான விடையளிக்க.

11. திருக்குறளில் இடம்பெற்றுள்ள உவமைகள் புலப்படுத்தும் செய்திகள் குறித்துக் கட்டுரை வரைக.

12. இளமை நிலையாமை குறித்து நாலடியார் கூறுவனவற்றைத் தொகுத்துரைக்க.

13. சிறுபஞ்சமூலம் வலியுறுத்தும் அறக்கருத்துக்களைத் தொகுத்துக் கட்டுரை வரைக.

14. பூதஞ்சேந்தனார் கூறும் 'இனியன'வற்றைக் தொகுத்துரைக்க.

15. ஔவையாரின் 'ஆத்திசூடி' வலியுறுத்தும் வாழ்வியல் அறங்களை விளக்கி வரைக.

16. முதுமொழிக்காஞ்சி வலியுறுத்தும் உயரிய வாழ்வியல் அறங்களைத் தொகுத்துரைக்க.

17. பழமொழிகளின்வழி முன்றுறையரையனார் வலியுறுத்தும் விழுமிய அறக்கருத்துகளைத் தொகுத்துரைக்க.

———————

| UG–CN–1024 | BLTN–24 |
|---|---|

# U.G. DEGREE EXAMINATION — DECEMBER 2023.

தமிழ்

Second Year

மொழித்திறன்

Time : 3 hours Maximum marks : 70

பகுதி அ — (3 × 3 = 9 மதிப்பெண்கள்)

பின்வரும் வினாக்களில் எவையேனும் மூன்றனுக்கு மட்டும் விடையளிக்க.

1. பேச்சாளருக்குரிய சிறப்புத் தகுதிகள் யாவை?

2. கட்டுரைகளின் உள்ளடக்கங்கள் குறித்து எழுதுக.

3. நீதிமன்றச் செய்திகளை எழுதும் முறை குறித்து எழுதுக.

4. அலுவலகக் கடிதங்களின் வகைகளைப் பற்றி எழுதுக.

5. நூல் மதிப்புரை எழுதுபவர்க்குத் தேவையான அடிப்படைத் தகுதிகள் யாவை?

பகுதி ஆ — (3 × 7 = 21 மதிப்பெண்கள்)

பின்வரும் வினாக்களில் எவையேனும் மூன்றனுக்கு மட்டும் விரிவான விடையளிக்க.

6. மேடைப் பேச்சின் ஆற்றல் வாய்ந்த நோக்கு, போக்கு, பண்புகள் குறித்து விளக்குக.

7. இலக்கியக் கட்டுரைகளின் வகைகள் குறித்து விளக்கி எழுதுக.

8. பத்திரிகைச் செய்திகளின் முகப்பும், உடலும் அமைக்கும் பாங்கினைக் குறித்து விளக்கி எழுதுக.

9. சுருக்கி வரைதலின் முறைமைகள் குறித்து விளக்குக.

10. ஒருவர் திரைப்படத் திறனாய்வாளராக உருவாகத் தேவையான படிநிலைகளை விளக்குக.

பகுதி இ — (4 × 10 = 40 மதிப்பெண்கள்)

பின்வரும் வினாக்களில் எவையேனும் நான்கனுக்கு மட்டும் விடையளிக்க.

11. பேச்சுக்கலையின் தோற்றம், வளர்ச்சி குறித்துக் கட்டுரை வரைக.

12. கட்டுரைகளின் வகைகளை விவரிக்க.

13. அரசாங்க மற்றும் மக்கள் மன்ற, நீதிமன்ற செய்திகளை எழுதும் முறைமை குறித்து விளக்கி வரைக.

14. அலுவலகக் கடிதங்களின் வகைகளை விவரித்துக் கட்டுரை வரைக.

15. நூல் மதிப்புரையின் இலக்கணத்தையும், அதனை எழுதுவோர் பின்பற்ற வேண்டிய நெறிமுறைகள் குறித்தும் விளக்கி வரைக.

16. இலக்கியத் திறனாய்வின் வகைளை விவரித்துக் கட்டுரை வரைக.

17. ஆவணங்களின் அமைப்புமுறை, எழுதும் முறை, ஆவணச்சட்டங்கள் குறித்து விளக்குக.

---

| UG-CN-1025 | BLTAN-21 |
|---|---|

U.G. DEGREE EXAMINATION –
DECEMBER 2023.

தமிழ்

Second Year

ஊடகக் கலை

Time : 3 hours Maximum marks : 70

பகுதி அ — ($3 \times 3 = 9$ மதிப்பெண்கள்)

கீழ்க்காணும் ஐந்து வினாக்களில் இருந்து ஏதேனும் மூன்று வினாக்களுக்கு 100 வார்த்தைகளுக்குள் விடை தருக.

1. சமூகமயமாதல் என்றால் என்ன?

2. மணிக்கொடி – குறிப்பு எழுதுக.

3. கியான் வாணியின் செயல்பாடுகள் யாவை?

4. திரைமொழி என்றால் என்ன?

5. குறும்படம் - விளக்கம் எழுதுக.

பகுதி ஆ — ($3 \times 7 = 21$ மதிப்பெண்கள்)

கீழ்க்காணும் ஐந்து வினாக்களில் இருந்து ஏதேனும் மூன்று வினாக்களுக்கு 200 வார்த்தைகளுக்குள் விடை தருக.

6. ஊடகங்களின் தன்மைகள் குறித்து எழுதுக.

7. சிலப்பதிகாரத்தில் செய்தி பரவிய முறைகள் குறித்து எழுதுக.

8. வானொலி கண்டுபிடிப்பின் முன்னோடிகள் பற்றி விளக்குக.

9. தொலைக்காட்சியில் இடம்பெறும் நிகழ்ச்சி வகைகள் குறித்து எழுதுக.

10. ஒளிப்படக் கலையின் தோற்றம் பற்றி எழுதுக.

பகுதி இ — ($4 \times 10 = 40$ மதிப்பெண்கள்)

கீழ்க்காணும் ஏழு வினாக்களில் இருந்து ஏதேனும் நான்கு வினாக்களுக்கு 500 வார்த்தைகளுக்குள் விடை தருக.

11. தகவல் தொடர்பு - தோற்றமும் வளர்ச்சியும் குறித்துக் கட்டுரை ஒன்றினை எழுதுக.

12. தற்காலத்தில் வெளிவரும் தமிழ் நாளிதழ்கள் குறித்து விவரித்தெழுதுக.

13. செய்தியாளரின் பண்புகள் குறித்து விவரி.

14. தொலைக்காட்சிக்கு செய்தி சேகரிக்கும் முறைகள் குறித்து விளக்கியெழுதுக.

15. வானொலி விளம்பரக்கலை - விவரி.

16. தமிழ்த் திரைப்படத்தின் தோற்றமும் வளர்ச்சியும் குறித்து விவரித்தெழுதுக.

17. ‘தகவல் தொடர்பும் சமூகமும்’ எனும் பொருளில் கட்டுரை ஒன்றினை எழுதுக.

———————